தினகரன்

**விவசாயிகளுக்கு முழு மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள் பாஜக கூட்டத்தில் வலியுறுத்தல்**

பதிவு செய்த நேரம்:2012-04-14 11:47:50

ஆற்காடு: விவசாயிகளுக்கு வேளாண்மை இடு பொருட்களை அரசு முழு மானிய விலையில் வழங்க வேண்டும் என ஆற்காட்டில் நடந்த பாஜக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஆற்காட்டில் நகர, ஒன்றிய பாஜக செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. தொகுதி பொறுப் பாளர் விநாயகம் தலைமை தாங்கினார். நகர, ஒன்றிய நிர்வாகள் லோகநாதன், ரவி, பாலசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகுமார் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட தலைவர் ஜி.வி.பிரகாஷ், மாநில செயற்குழு உறுப்பினர் தணிகாசலம், மாவட்ட துணைத்தலைவர் கஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் மதுரையில் வரும் 28, 29ல் நடைபெறும் பாஜக மாநில மாநாட்டில் பெரும் திரளாக சென்று கலந்து கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு வேளாண்மை இடுபொருள் மற்றும் விதைகளை அரசு முழு மானிய விலையில் வழங்க வேண்டும்.

விவசாயத்துக்கு வழங்கும் மும்முனை மின்சாரத்தை 10மணி நேரமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முடிவில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் மனோகரன் நன்றி கூறினார்.

**வேளாண்மையில் தமிழகம் முதலிடம் பிடிக்கும் கலெக்டர் பேச்சு**

பதிவு செய்த நேரம்:2012-04-14 10:17:40

தொண்டாமுத்தூர்: கோவை தொண்டாமுத்தூர் ஒன்றியம் விராலியூரில் தமிழக அரசு சார்பில் உழவர் பெருவிழா நேற்று நடந்தது. கோவை கலெக்டர் கருணாகரன் 448 விவசாயிகளுக்கு ரூ.10 லட்சத்து 87 ஆயிரம் மதிப்பிலான விவசாய கருவிகள், மானிய நிதி, இடு பொருட்கள் மற்றும் ஆடு வளர்ப்பு திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய கால்நடை மருத்துவர்களுக்கு சான்றிழ் வழங்கி பேசியதாவது:

உலகிலேயே சிறந்த பண்பாடு தமிழர்களின் பண்பாடு என்பது கலை மற்றும் இலக்கிய சிறப்புகளில் விளங்குகிறது. பண்டைய காலத்தில்  வெளி நாட்டில் இருந்து வந்த அறிஞர்கள் நமது பண்பாட்டின் மேன்மையை பற்றி எழுதி உள்ளனர்.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து திருவள்ளுவரும் பயிர் தொழில் உயர்ந்தால் உலகில் அனைத்து தொழில்களும் வளர்ச்சி அடையும் என குறிப்பிட்டு உள்ளார்.

2004ம் ஆண்டில் துவங்கப்பட்ட உழவர் பாதுகாப்பு திட்டத்தில் கடந்த ஓராண்டில் ரூ.1.50 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு உள்ளது.

அரசின் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில் கோவை மாவட்டத்தில் இது வரை 3500 மேற்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தில் சிறந்த பயனாளிகளுக்கு முதல் பரிசாக ரூ.3ஆயிரம், இரண்டாவது பரிசாக ரூ.2500 மூன்றாவது பரிசாக ரூ.2000 மற்றும் ஆறுதல் பரிசாக ரூ. ஆயிரம் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டு உள்ளது.

அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்தாலும், விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் தான் முன்னோடி திட்டம் ஆகும். அரசின் சிறப்பான திட்டங்கள் மூலம் இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்தி வேளாண்மையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பிடிக்கும்

இவ்வாறு கருணாகரன் பேசினார்.

முன்னதாக, எஸ்பி. வேலுமணி எம்எல்ஏ, தொண்டாமுத்தூர் ஒன்றிய தலைவர் மதுமதி விஜயகுமார் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் புரட்சிதம்பி, வெள்ளிமலை பட்டணம் ஊராட்சி தலைவர் குழந்தைவேலு, தொகுதி அதிமுக செயலாளர்  ஜி.கே.விஜயகுமார், புல்லட் கந்தசாமி, ரங்கராஜ், ராசு, ஜெயபால், கருப்புசாமி, செல்வதுரை, தம்பு, ராமசாமி உட்பட கலந்து கொண்டனர். விவசாய கண்காட்சி நடந்தது. முடிவில், விவசாயிகள் அனைவருக்கும் வடை பாயாசத்துடன் மதிய விருந்து பரிமாறப்பட்டது. விவசாயிகளின் வள்ளி, கும்மி ஆட்டம் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-04-14 10:34:24

நாமக்கல்: நாமக்கல் விதை பரிசோதனை நிலையத்தில் கோவை விதைச்சான்று இணை இயக்குனர் தங்கராசு தலைமையிலான குழுவினர் திடீர் ஆய்வு மேற்கொண்ட னர்.  விதை பரிசோதனை நிலைய ஆவணங்கள், உபகரணங்கள், விதைப்பு மற்றும் கணக்கெடுப்பு, விதை மாதிரிகள், விதை உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் உள்ளிட்டவை பற்றி ஆய்வு நடந் தது. இதில், விதைச்சான்று

உதவி இயக்குனர்கள் பழனிகுமார், சுப்பிரமணி, வேளாண் அலுவலர்கள் ராமச்சந்திரன், சாரதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் இணை இயக்குனர் வேண்டுகோள்

பதிவு செய்த நேரம்:2012-04-14 10:34:08

நாமக்கல்: சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குனர் வேண்டுகோள் விடுத்தள்ளார்.

மாநில விதைசான்று இணை இயக்குனர் தங்கராஜ், நாமக்கல் மாவட்டத்தில் விதைசான்று மற்றும் விதை ஆய்வக பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராசிபுரம் தாலுகா வெண்ணந்தூரை அடுத்த தொட்டிப்பட்டி கிராமத்தில் செந்தில் என்ற விவசாயி தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பருத்தி ஆதார விதைப்பண்ணையை பார்வையிட்ட இணை இயக்குனர் தங்கராஜ், விவசாயிடம் விபரங்களை கேட்டறிந்தார். இதன்பின்னர் அவர் கூறியதாவது: விதைசான்று துறையில் பதிவு செய்து தொடர் கண்காணிப்பு செய்யப்படும் விதைப்பண்ணைகளில் இருந்து விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகளுக்கு வெள்ளைநிற அட்டையும், சான்று விதைகளுக்கு நீல நிற அட்டையும் விதைசான்ற அலுவலர்களின் நேரடி பார்வையில் விதைப்பையில் பொறுத்தப்படுகிறது.

இந்த விதைகளுக்கு முளைப்புதிறன், சுத்தம், தூய்மை மற்றும் வீரியத்துக்கு தமிழ்நாடுஅரசு விதைசான்று துறை உறுதி அளிக்கிறது. விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதைகளை வாங்கி பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம் என்றார்.

இந்த ஆய்வின் போது, உதவி இயக்குனர்கள் பழனிக்குமார், சுப்பிரமணியம், விதைசான்று அலுவலர்கள் கந்தசாமி, முருகேசன், சுரேஸ்குமார்க ஆகியோர் உடனிருந்தனர்.

### கால்நடை வளர்ப்பு பயிற்சி கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-04-14 10:09:14

க.பரமத்தி: இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சின்னதாராபுரம் ஊராட்சியில் 162 பயனாளிகளை ஊராட்சி நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு விரைவில் இலவச ஆடுகள் வழங்கப்பட உள்ளது. இதற்காக பயனாளிகளுக்கு ஆடுகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி கூட்டம் நடைபெற்றது. சின்னதாராபுரம் டாக்டர் மோகன்ராஜ் வரவேற்றார்.

கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தலைமை வகித்தார். பயிற்சி கால்நடை பராமரிப்புதுறை நோய் பிரிவு உதவி இயக்குநர் பழனிவேல், ஊராட்சி தலைவர் கலையரசி

ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
ஆடு வளர்ப்பு, லாபம் ஈட்டுவது பற்றி பயனாளிகளுக்கு கரூர் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய பேராசிரியர் செந்தில்வேல் பேசினார்.

வெக்கை சார்பு நோய், நீலநாக்கு நோய், செம்மறியாட்டு அம்மை நோய் ஆகியவை நச்சுயிரி நோய், அடைப்பான் நோய், துள்ளுமாரி நோய், தொற்று கழித்தல் நோய், நுரையீரல் அயர்ச்சி நோய், கருச்சிதைவு நோய், குளம்பு அழுகல் நோய் ஆகியவை நுண்ணுயிரி நோய்.

நோய்களில் இருந்து ஆடுகளை காக்க ஆண்டுக்கு ஒருமுறை அருகே உள்ள அரசு மருத்துவமனைக்கு கால்நடைகளை அழைத்து வந்து டாக்டர்களின் ஆலோசனையை பின் பற்றுவதுடன் உரிய பரிசோதனை செய்து தடுப்பூசி போடுவது அவசியம் என்று பயிற்சி கூட்டத்தில் விளக்கப்பட்டது.

செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பற்றி கால்நடை டாக்டர் மோகன்ராஜ், பஞ்சப்பட்டி பார்த்தீபன், நொய்யல் தமிழரசன் ஆகியோர் பொதுமக்களுக்கு பயிற்சி அளித்தனர்.
பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு பற்றி கையேடுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.
இதில் கால்நடை ஆய்வாளர்கள் மணி சக்திவேல், உதவியாளர்கள் மரிய உபகாரம், முருகேசன் மற்றும் கால்நடை வளர்போர் கலந்து கொண்டனர்.

**உழவர் பெரு விழாவில் கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நேரம்:2012-04-14 10:25:25

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி
அடு த்த எழிலூர் மற்றும் நுனாக் காடு கிராமத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இதில், கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.
ஒன்றியக்குழு தலைவர் வேதநாயகி சிங்காரவேலு தலைமை வகித்தார். நகர்மன்ற தலைவர் உமாமகேஸ் வரி, வேளாண் உதவி இயக்குனர் நடேசன் முன்னிலை வகித்தனர். வேளாண் துறை சார்பில் எலி ஒழிப்பு முகாம் நடைபெற்றது.
மேலும் திருந்திய நெல் சாகுபடி, விதை நேர்த்தி முறைகள், பயறு வகைப்பயிர் சாகுபடி முறைகள் குறித்த கருத்து கண்காட்சியும், தோட்டக்கலை த்துறை சார்பில், காய்கறி பயிர்கள் சாகுபடி, பழப்பயிர்கள் சாகுபடி குறித்த செயல்விளக்கங்களும் நடைபெற்றது.
வேளாண் பொறியியல் துறை சார்பில், வேளாண்மையில் நவீன கருவிகள் பயன்பாடு குறித்த

கருத்துகளும் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. கால் நடை பராமரிப்பு துறை சார்பில் மருத்துவ முகாம் நடைபெற்றது. வேளாண் அலுவலர் தெய்வேந்திரன் நன்றி கூறினார்.

### மீன்களில் இருந்து மதிப்பூட்டிய பொருட்கள் தயாரிக்க மீனவ பெண்களுக்கு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-04-14 11:53:30

நாகர்கோவில்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மீன் வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மீன்பதப்படுத்தும் துறையின் மூலமாக மதிப்பூட்டிய மீன் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி கடந்த 10ம் தேதி அசிசி வளாகத்தில் தொடங்கியது. இந்த பயிற்சியில் 20 உள்நாட்டு மீனவ பெண்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் நன்னீர் மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் போன்ற மீன்களிலிருந்து மீன் ஊறுகாய், மீன் கட்லட், மீன் பர்கர், மீன் சமோசா, மீன் சாண்ட்வீச், மீன் பக்கோடா, மீன் பஜ்ஜி போன்ற பொருட்கள் தயாரிக்கும் விளக்கமும், செய்முறை பயிற்சியும் 3 நாட்கள் நடந்தன.
பயிற்சியின் நிறைவு விழா நேற்று நடந்தது.

மீன்துறை உதவி இயக்குனர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) முசாதிக் தலைமை வகித்தார். பயிற்சியில் கடலோர அமைதி மற்றும் வளர்ச்சியின் இயக்குனர் கில்டஸ் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்.

இதுபோன்று மேலும் 2 பயிற்சிகள் குமரியில் நடைபெற உள்ளது. பயிற்சி பெற விரும்பும் உள்நாட்டு மீனவர்கள் தங்கள் முகவரி யுடன் முனைவர் வெங்கட்ரமணி, முதல்வர் மீன் வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி-8 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

---

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நவம்பர் – மார்ச் மாத காலத்தில் 21 சதவீதம் உயர்வு தாவர எண்ணெய் இறக்குமதி 38 லட்சம் டன்



சுதானுகா கோசல்,கொல்கத்தா

தாவர எண்ணெய் இறக்குமதி, நடப்பு 2011–12 எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) மார்ச் வரையிலான ஐந்து மாதங்களில் 21 சதவீதம் உயர்ந்து 38 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற 2010–11 பருவத்தின் இதே காலத்தில் 31.28 லட்சம் டன்னாக இருந்தது. இந்திய தாவர எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

பாமாயில்

தாவர எண்ணெயில் சமையல் எண்ணெய் மற்றும் இதர பயன்பாட்டு எண்ணெய் வகைகள் அடங்கும். இறக்குமதியாகும் தாவர எண்ணெயில் சமையல் எண்ணெய் வகைகளின் பங்களிப்பே அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாக பாமாயில்தான் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி 78 சதவீதம் உயர்ந்து 8.22 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

இதே காலத்தில் இறக்குமதியான தாவர எண்ணெயில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலின் பங்கு 21 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே சமயம் கச்சா பாமாயிலின் பங்கு 79 சதவீதமாக

*குறைந்துள்ளது. எனினும் கச்சா பாமாயில் இறக்குமதி 25.63 லட்சம் டன்னிலிருந்து 29 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.*

*சமையல் எண்ணெய் இறக்குமதியில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலின் பங்கு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாமாயில் உற்பத்தியில் முன்னிலையில் உள்ள இந்தோனேஷியா, ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை 9 சதவீதமாக குறைத்தது. அதே சமயம் கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை 18 சதவீதமாக உயர்த்தியதே இதற்கு காரணமாகும்.*

*67 சதவீதம் உயர்வு*

*2012 மார்ச் மாதத்தில் தாவர எண்ணெய் மொத்த இறக்குமதி 67 சதவீதம் உயர்ந்து 7.28 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதில் 7.02 லட்சம் டன் சமையல் எண்ணெயும், 26,000 டன் இதர பயன்பாட்டு எண்ணெய் வகைகளும் அடங்கும். 2011 மார்ச் மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 4.36 லட்சம் டன்னாக இருந்தது.*

## *ஏப்ரல் 12 வரை 22 லட்சம் டன் கோதுமை கொள்முதல்*

*கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரல் 1–ந் தேதி தொடங்கியது. 12–ந் தேதி வரை பல்வேறு அரசு முகமை அமைப்புகள் 22 லட்சம் டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளன. மத்தியபிரதேச மாநிலத்தில் 19.38 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அரியானா மாநிலத்தில் 1.68 லட்சம் டன்னும், ராஜஸ்தானில் 51,487 டன்னும், குஜராத்தில் 21,308 டன்னும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பஞ்சாபில் விரைவில் கோதுமை கொள்முதல் விறுவிறுப்படையும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.*

## *பல்வேறு பயிர்ரகங்களைச் சேர்ந்த 1 லட்சம் மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்று விதைச்சான்று இயக்குனர் தகவல்*

*கோவை, ஏப்.14–*

*பல்வேறு பயிர்ரகங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் மெட்ரிக் டன் விதைகளுக்கு விதை சான்று வழங்கி உள்ளதாக விதைச் சான்று இயக்குனர் தெரிவித்தார்.*

*இது குறித்து விதை சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குனர் கோபாலகிருஷ்ணன் கூறியதாவது:–*

*இடுபொருட்கள்*

*இந்திய பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. விவசாயம் சிறப்பாக*

நடைபெற இடுபொருட்கள் தரமானதாகவும் உரிய நேரத்தில் தேவைப்படும் அளவு கிடைக்க வேண்டும். விதை என்ற இடுபொருளை தேர்வு செய்யும் போது சிறிது கவன குறைவு ஏற்பட்டாலும் மொத்த விளைச்சலும் பாதிக்கப்படும்.

இதன் அடிப்படையில் கோவையில் உள்ள விதைசான்றளிப்பு துறை விதைச் சான்று, விதைச் சட்ட அமலாக்கம், விதை பரிசோதனை, பயிற்சி, அங்ககச் சான்றளிப்பு உள்பட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

விற்பனை பட்டியல்

இந்த நிலையில் விவசாயிகள் விதைப்புக்கு தேவையான விதைகளை வாங்கும் போது, விதை விற்பனை உரிமம் உள்ள கடைகளில் மட்டுமே வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும் விதைகளுக்கு உரிய விற்பனை பட்டியல் அவசியம் இடம் பெற்றிருக்க வேண்டும். அதில் விதை வாங்கிய தேதி, விதையின் பெயர், அளவு, காலவதி தேதி போன்ற விவரங்களுடன் கையொப்பமிட்டு பட்டியல் பெற வேண்டும்.

மேலும் விதைப்பைகளில் உள்ள சான்று அட்டை, விவர அட்டையில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா மற்றும் வாங்கப்படும் விதைகளுக்கு விதை தரம் குறித்த அறிக்கை உள்ளதா என்று பார்த்து வாங்க வேண்டும்.

எழுத்து மூலம் புகார்

வாங்கிய விதைகளில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் தங்கள் பகுதி விதை ஆய்வாளர் அல்லது விதை ஆய்வு துணை இயக்குனரிடம் எழுத்து மூலம் புகார் தெரிவிக்க வேண்டும். புகாருடன் வாங்கிய விதைகளின் பட்டியல், விதைப்பை அல்லது விதைப்பையில் உள்ள சான்று அட்டை, உற்பத்தியாளர் அட்டை மற்றும் விவர அட்டையை இணை த்து கொடுக்க வேண்டும். கடந்த 2011–12–ம் ஆண்டில் பல்வேறு பயிர் ரகங்களில் சுமார் 1 லட்சத்து 2,383 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக சந்தேகங்கள் இருந்தால் அருகில் உள்ள விதைச்சான்று துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு விதைச்சான்றளிப்பு இயக்ககம், தடாகம் சாலை, கோவை என்ற முகவரிக்கு நேரில் அணுகி தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் 448 பேருக்கு நலத்திட்ட உதவி கலெக்டர் கருணாகரன்– எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ வழங்கினர்

கோவை,ஏப்.14–

தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் 448 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இவற்றை கலெக்டர் கருணாகரன், எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ ஆகியோர் வழங்கினார்கள்.

உழவர் பெருவிழா

தமிழக அரசு சார்பில் தமிழ் புத்தாண்டை உழவர் பெருவிழாவாக கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி ஒவ்வொரு ஒன்றியங்களிலும் நேற்று உழவர் பெருவிழா நடைபெற்றது. கோவை மாவட்ட நிர்வாகம் சார்பில் கோவை தொண்டாமுத்தூர் ஒன்றியம் விராலியூரில் நடந்த உழவர் பெருவிழாவுக்கு கலெக்டர் கருணாகரன் தலைமை தாங்கினார். முன்னாள் தொழில் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார்.

விழாவில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் பொறியியல் துறை சார்பில் மொத்தம் 448 பேருக்கு ரூ.10.47 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் ஆடுவளர்ப்பு திட்டத்தில் சிறப்பாக ஆடுகளை வளர்த்து பயனுக்கு கொண்டுவந்த 3 ஏழை விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கருணாகரன் வழங்கி பேசும்போது கூறியதாவது:–

உழவர் பாதுகாப்பு திட்டம்

உலகத்தில் சிறந்த பண்பாடு தமிழ்பண்பாடு. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்பண்பாட்டு சிறப்பு பற்றி ரோமாபுரியில் எழுதி வைத்துள்ளனர். பண்டைய தமிழர்கள் விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதன்மை தொழிலாக கொண்டு இருந்தனர். விவசாய துறை வளர்ச்சி அடைந்தால் தான் அனைத்து துறைகளும் வளர்ச்சி பெற முடியும் என்ற நோக்கில் நமது முதல்–அமைச்சர் விவசாயத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்து வருகிறார். இதற்காக உழவர் பாதுகாப்பு திட்டத்தை ஏற்படுத்தினார். இந்த திட்டத்தில் கோவை மாவட்டத்தில் இதுவரை ரூ.1 கோடியே 50 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டு தமிழ்புத்தாண்டில் உழவர் பெருவிழா கொண்டாடுவ தற்கு அறிவித்துள்ளார்கள். இந்த விழாவில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்களுக்கு அனைத்து விவசாயத்துறை உதவிகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதன் படி விவசாய தொழில் முன்னேற்றம் அடையும். 2–வது பசுமை புரட்சிக்கு இது வித்திடும். இதன் மூலம் இந்தியாவில் விவசாயத்துறை முதல் இடத்தை பிடிக்க முதல்–அமைச்சர் நடடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு கலெக்டர் கருணாகரன் பேசினார்.

100 சதவீத மானியம்

விழாவில் எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ பேசும்போது கூறியதாவது:– உழவர்கள் வாழ்வில் உயரவும், உழவுத்தொழில் சிறப்பாக நடைபெறவும், தமிழக முதல்–அமைச்சர் உழவர் பெருவிழாவை அறிவித்து இன்றைய தினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நமது முன்னோர்கள் காலத்தில் இருந்தே இந்த தமிழ் புத்தாண்டு கொண்டாப்படுகிறது. அந்த சித்திரை மாதத்தில் இந்த உழவர் பெருவிழா கிராமங்களில் ஒரு மாதம் கொண்டாடப்படுகிறது. இந்த கொண்டாட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு என்ன? என்ன? தேவை உள்ளதோ? அத்தனை தேவைகளும் நிறைவேற்றப்படும். விவசாயத்துக்காக ரூ.17 ஆயிரம் கோடியை முதல்–அமைச்சர் அறிவித்துள்ளார். சொட்டு நீர்பாசனத்துக்கு 100 சதவீத

மானியம்அளித்துள்ளார். இதுபோல் எண்ணற்ற திட்டங்களை விவசாயிகள் வளம் பெற அறிவித்துள்ளார். இந்த விழாவில் விவசாயிகள் உள்ளம் மட்டுமில்லாமல், உடலும் மகிழ்ந்து களிகூர அறுசுவை உணவையும் அளிக்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டு, அந்த உணவு அனைவருக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

*யார்–யார்?*

விழாவில் முன்னதாக வேளாண்மை இணை இயக்குனர் மணி மொழி வரவேற்றார். தொண்டாமுத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் வி.மதுமதி விஜயகுமார் வாழ்த்தி பேசினார். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வணங்காமுடி விவசாயிகளுக்கு வழங்கப்படும வங்கிசேவைகள் பற்றி பேசினார் துணைத்தலைவர் புரட்சித்தம்பி, வெள்ளிமலைப்பட்டினம் ஊராட்சி தலைவர் வி.குழந்தைவேல், நரசிபுரம் ஊராட்சி தலைவர் பி.முரளிதரன், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் எம்.ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் செல்வத்துரை, மாவட்ட பொருளாளர் கருப்பசாமி, விவசாய பிரிவு இணை செயலாளர் புல்லட் கந்தசாமி, தொகுதி செயலாளர் விஜயகுமார், தென்கரை பேரூராட்சி தலைவர் சக்திவேல், துணைத்தலைவர் கருணாகரன், பொதுக்குழுஉறுப்பினர் ரங்கராஜ், ஆறுச்சாமி, ஜெயபால், ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை உதவி இயக்குனர் ம.கி.ஜெயஸ்ரீ நன்றி கூறினார். விழாவில் அனைத்து விவசாயத்துறைகளை சார்ந்த கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தது.